# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

50 ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE

REACHING NATIONS

*India's National Spiritual Newspaper*

**Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN**

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: SIS. SERENA BEVIN

**Vol. XXVIII** SEPTEMBER 2023 **No. 09**


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

### சங்கீதம் 101:1-8

1. இரக்கத்தையும் நியாயத்தையும் குறித்துப் பாடுவேன்; கர்த்தாவே, உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன்.
2. உத்தமமான வழியிலே விவேகமாய் நடப்பேன்; எப்பொழுது என்னிடத்தில் வருவீர்! என் வீட்டிலே உத்தம இருதயத்தோடு நடந்து கொள்ளுவேன்.
3. தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்க மாட்டேன்; வழி விலகுகிறவர்களின் செய்கையை வெறுக்கிறேன்; அது என்னைப் பற்றாது.
4. மாறுபாடான இருதயம் என்னை விட்டு அகலவேண்டும்; பொல்லாதவனை அறியமாட்டேன்.
5. பிறனை இரகசியமாய் அவதூறு பண்ணுகிறவனைச் சங்கரிப்பேன்; மேட்டிமைக் கண்ணனையும் பெருநெஞ்சுள்ளவனையும் பொறுக்க மாட்டேன்.
6. தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்.
7. கபடு செய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்பதில்லை; பொய்சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை.
8. அக்கிரமக்காரர் ஒருவரும் கர்த்தருடைய நகரத்தில் இராதபடி வேர் அறுப்புண்டுபோக, தேசத்திலுள்ள அக்கிரமக்காரர் யாவரையும் அதிகாலமே சங்கரிப்பேன்.



# நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்!

## உங்கள் விசுவாசத்தைக் கட்டவிழ்க்கும் தேவ செய்தி! கருத்தாய்ப் படியுங்கள்!!

- போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்

எண்ணுக்கடங்காத பிரச்சினைகளை ஒவ்வொரு நாளும் திரளான கிறிஸ்தவர்கள் சந்திக்கிறார்கள் – சரீர வேதனைகள், உணர்ச்சிகளின் போராட்டங்கள், பணச்சிக்கல்கள், குடும்பப் பிரச்சினைகள் என்று ஏராளமான பிரச்சினைகள், துன்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வரும்போது சிலர், "அளவுக்கதிகமான துன்பங்கள் எனக்கு ஏற்படுகின்றன. இனியும் அவற்றை எதிர்த்துப் போராட என்னில் பெலனில்லை. எப்படி இவற்றை நான் சமாளிப்பேன் ?" என்று கலங்குகின்றனர். இன்று, இவைகள் உங்கள் அனுபவமாக இருக்கலாம்.

மிகவும் கடினமான சூழ்நிலைகளை அனுதினமும் சந்திக்கும் பரிசுத்தவான்களிடமிருந்து எங்களுடைய ஊழியத்திற்கு பல கடிதங்கள் வருவதுண்டு. சமீபத்தில் நான் அக்கடிதங்களை வாசிப்பதில் அதிக நேரம் செலவழித்தேன்.

தேவ பக்தியுள்ள ஒரு சகோதரி இவ்வாறு தெரிவித்தார்கள். "எனக்கு திருமணமாகி 35 வருடங்களுக்குமேல் ஆகிவிட்டது. நான் இப்பொழுது பாட்டியும் ஆகிவிட்டேன். ஆனால் என் கணவரது விபசாரத்தினால் இன்று என் குடும்பம் நாசமாகி வருகிறது. என் கணவர்


தொடர்ச்சி 3-ம் பக்கம்.....



அழைப்பின் எதிரொலி!



**கிறிஸ்தவ யூடியூப் சானல்!**

*போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!*

**5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!**

**தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு**

**தினந்தோறும் - காலை 5.00 மணிக்கு**

**தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு**

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

**CHIEF EDITOR**

Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**ADMINISTRATION**

Bro. N. Prakasam, M.A., General Manager
Dr. Rabinder Boaz, M.S.
Bro. K. Puratchivendan

**EDITORIAL BOARD**

Sis. Jesy Veena Sam
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Dr. A. Richard Samuel, M.A., Ph.D.
Rev. Dr. K.R. Rajasekaran

**EDITOR, PUBLISHER & PRINTER**

Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858

**E.mail ID**

sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**

www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**

Echo of His Call

"சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்; கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்."
– ஏசாயா 60:22

கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே!

நமது ஆண்டவமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம்.

நீங்கள் நலமாயிருக்கிறீர்கள் என்று நம்புகிறோம். தினமும் உங்களுக்காக ஜெபிக்கிறோம். தைரியமாயிருங்கள்.

சமீப நாட்களில் நாங்கள் ஊழிய சம்பந்தமாக மேற்கொண்ட பிரயாணங்களிலும், முயற்சிகளிலும், செயல்பாடுகளிலும், தேவனுடைய வல்லமையான கரங்கள் கை கொடுத்தன. இயேசு ஆண்டவர் இரவும் பகலும் தூங்காமல் எங்களோடு இருந்து வந்தார். எங்களுக்காக ஜெபிக்கிற மற்றும் தாங்குகிற உங்களையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஆசீர்வதிப்பார்.

ஊழியக் களத்தில் நம்முடைய உடன் ஊழியர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் பல வியாதிகளால் தாக்கப்பட்டுள்ளனர். அதினால் பல ஊழியர்கள் முழு மூச்சுடன் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்ற முடியவில்லை. இந்த காரியத்திற்காக உங்கள் விசேஷ ஜெபங்களை எதிர்பார்க்கிறோம். இது மிகவும் அவசரமானது மற்றும் அவசியமானது.

மிகுந்த பிரயாசங்களுடன் நாங்கள் உங்களுக்கு அனுப்பும் **அழைப்பின் எதிரொலி** மாதப்பத்திரிகைகள் உங்கள் கைகளில் கிடைக்காமல் போகின்றன என்று அறிந்து வருந்துகிறோம். என்ன நடக்கிறது என்று அறிந்து கொள்ள முயற்சி எடுத்து வருகிறோம். ஏனென்றால், ஏராளமான பத்திரிகைகள் பூட்டிய வீடு, இடமாற்றம், இறப்பு மற்றும் நிராகரிப்பு ஆகிய காரணங்களால் திருப்பி அனுப்பப்பட்டு, அவைகள் எங்களுக்கே வந்து சேருகின்றன. பின்னாட்களில் மேற்கூறிய காரணங்கள் சில, உண்மையானவை அல்ல என அறிந்து கொண்டோம். பிரியமானவர்களே! நாங்கள் உங்களுடனான ஐக்கியத்தை இழக்க விரும்பவில்லை. ஏனெனில், நீங்கள் எங்களுக்கு மிகவும் விசேஷமானவர்கள். எனவே, **அழைப்பின் எதிரொலி** மாதப் பத்திரிகை உங்களுக்கோ, உங்கள் உறவினர், நண்பர்களுக்கோ குறிப்பிட்ட தேதிகளில் வந்து சேராவிட்டால் கடிதம் மூலமாகவோ, ஈமெயில் மூலமாகவோ, வாட்ஸ் அப் மூலமாகவோ, SMS மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ எங்களுக்குத் தெரிவியுங்கள். உங்கள் முகவரி மாறும்போது உங்கள் பழைய மற்றும் புதிய முகவரியை எங்களுக்குத் தெரிவியுங்கள். மறுபடியும் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை உடனடியாக அனுப்புவோம். மேலும் தயவு கூர்ந்து உங்களுடைய மின்னஞ்சல் முகவரியையும் (e.mail address) அனுப்பவும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

நமது உடன் ஊழியர்களின் கடும் உழைப்பின் மூலம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் மாதந்தோறும் கீழ்க்காணும் தேதிகளில் தபால் மூலமும், ஈ மெயில் மூலமும் தவறாமல் 16 மொழிகளிலும் அனுப்பப்படுகின்றன:

| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழ் | – | முந்தைய மாதம் 28–ம் தேதி |
| 2. | ஆங்கிலம் | – | மாதந்தோறும் 2ம் தேதி |
| 3. | சிங்களம் | – | மாதந்தோறும் 2ம் தேதி |
| 4. | ஆப்பிரிகன்ஸ் | – | மாதந்தோறும் 4ம் தேதி |
| 5. | மலையாளம் | – | மாதந்தோறும் 4ம் தேதி |
| 6. | தெலுங்கு | – | மாதந்தோறும் 6ம் தேதி |
| 7. | இந்தி | – | மாதந்தோறும் 9ம் தேதி |
| 8. | கன்னடம் | – | மாதந்தோறும் 10ம் தேதி |
| 9. | மராத்தி | – | மாதந்தோறும் 12ம் தேதி |
| 10. | அசாமி | – | மாதந்தோறும் 12ம் தேதி |
| 11. | பெங்காளி | – | மாதந்தோறும் 14ம் தேதி |

| | | | |
|---|---|---|---|
| 12. | உருது | – | மாதந்தோறும் 14ம் தேதி |
| 13. | நேப்பாளி | – | மாதந்தோறும் 16ம் தேதி |
| 14. | குஜராத்தி | – | மாதந்தோறும் 16ம் தேதி |
| 15. | ஒடியா | – | மாதந்தோறும் 18ம் தேதி |
| 16. | பஞ்சாபி | – | மாதந்தோறும் 20ம் தேதி |

இந்த பத்திரிகைகளை நமது www.echoofhiscall.org என்ற வெப்சைட்டிலும் அந்தந்த நாட்களில் பதிவேற்றம் செய்கிறோம். நேரடியாகவும் படிக்கலாம். நகல் எடுத்தும் படிக்கலாம். இந்த வசதிகளையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். 75 ஊழியர்கள் தங்களின் கடும் உழைப்பின் மூலம் பத்திரிகையை நீங்கள் பெற்றுக் கொள்ள உதவி செய்கிறார்கள். முதலில் **அழைப்பின் எதிரொலி** செய்திகளை ஆங்கிலத்தில் எழுதி, அதை பல இணை ஆசிரியர்கள் உதவியினால் 15 மொழிகளில் மொழிபெயர்த்து, சரிபார்த்து, கம்ப்யூட்டரில் டைப் செய்து, நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைக்கு ஏற்றபடி வடிவமைக்கப்படுகிறது.



இவ்வாறு வடிவமைக்கப்பட்ட பின் அவைகள், அச்சகத்தில் அச்சிடப்பட்டு பத்திரிகைகளாகின்றன. அதன்பின் ஒவ்வொரு பத்திரிகையையும் கைகளினால் மடித்து, மாநில வாரியாக பகுதிவாரியாகப் பிரித்து, முறைப்படி பின்கோடு வாரியாகக் கட்டி வாகனத்தில் ஏற்றி அஞ்சல் விதிமுறைகளின்படி அஞ்சலகப் பணியாளர்களிடம் சரியான நேரத்தில் கொண்டு சேர்க்கிறது வரை 75 ஊழியர்கள் கடினமாகப் பணியாற்றுகிறார்கள். நமது இந்தப் பத்திரிகைகள் மொழி, மதம், நாடு என்ற வேறுபாடுகளைக் கடந்து உலகமெங்கும் வசிக்கும் மக்களைத் தொடுகிறபடியினால், சாத்தானானவன் ஊழியத்தில் ஈடுபடுபவர்களைக் குறிவைக்கிறான். எனவே, இவர்கள் ஆவிக்குரிய யுத்தங்களைச் சந்திக்க நேரிடுகிறது. இவர்களை நீங்கள் நினைத்துப் பாருங்கள்! இவர்களுக்காக தயவு செய்து ஜெபிப்பீர்களா?

நீங்களும் இந்த ஊழியத்தில் எதாவது விதத்தில் உதவி செய்ய முடியுமா என்று யோசித்துப் பாருங்கள்.

மாதந்தோறும் இப்பத்திரிகைகளை அவரவர் மொழியில் வாசித்து தங்கள் கருத்துக்களையும், முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளையும் தெரிவிக்கும் உறுதுணையாளர்கள் (Hon. Co-Ordinators) எங்களுக்கும் தேவை. இதன் மூலம் இந்த பத்திரிகை ஊழியத்தை இன்னும் சிறப்பாகச் செய்யலாம்.

உங்கள் பதில்களை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இந்த ஆசிரியர் பகுதியை நீங்கள் பொறுமையுடன் படித்ததற்காக நாங்கள் மீண்டும் உங்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

தேவசமாதானம் உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் &**
**அலெக்ஸ் சாம்சன் சாம்.**

(+91) 98412 71858 / 98410 71858,
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டு கர்த்தரால் உபயோகப்படுத்தப்பட்டவர்". தயவுசெய்து எனக்காக ஜெபியுங்கள். நான் துக்கம் நிறைந்தவளாய் இருக்கிறேன்.

இந்தச் சகோதரியின் வாழ்க்கையில் துக்கம் எங்கும் சூழ்ந்திருக்கிறது. இன்றும் அவர்கள் தன் கணவனை நேசிக்கிறார்கள்; அவர் மனந்திரும்பி வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால், "தேவனே இந்த நிலைமை என்னை வாட்டுகிறதே. இனியும் என்னால் தாங்க முடியாது" என்று அவர்கள் கலங்குகிறார்கள்.

மற்றொரு சகோதரி இவ்வாறு தெரிவித்தார்கள். "ஏழு ஆண்டுகளாக பெலவீனப்படுத்தும் வயிற்று வியாதியால் துன்பப்படுகிறேன். என்னுடைய கணவருக்கும் நல்ல சுகமில்லை. நாங்கள் கவனமாகச் செலவழித்தபோது எங்களுக்கு போதிய பணமில்லை. இப்பொழுது 89 வயதாயிருக்கும் என் தகப்பனார் புற்று நோயால் வேதனைப்பட்டு வருகிறார்". எங்களுக்காக நீங்கள் ஜெபியுங்கள்.

இந்தச் சகோதரி மரிக்கும் தன் தகப்பனாரையும் வியாதியான கணவரையும் வயிற்று வேதனையையும், பணக்கஷ்டத்தினால் உள்ள பயங்களையும் ஒவ்வொரு நாளும் சந்திக்க வேண்டியிருந்தது. "தேவனே இந்தப் போராட்டங்களெல்லாம் என்னைவிட பெலனுள்ளவைகளாயிருக்கின்றன. இவற்றையெல்லாம் நாங்கள் எப்படி சமாளிக்கப் போகிறோம்?" என்று அந்த சகோதரி பலமுறை கதறியிருக்கலாம்.

ஒருமுறை ஒரு போதகர் இவ்வாறு எழுதினார். "கடந்த ஜுலை மாதம் புற்றுநோய்க்காக எனக்கு அறுவை சிகிச்சை செய்தார்கள். புற்றுநோய் வந்திருந்த பகுதியைச் சுற்றியிருந்த சில பகுதிகளையும் எடுத்து விட்டார்கள். அதுமட்டுமில்லாமல் எனக்கு சர்க்கரை வியாதியும், வயிற்றுப் புண்ணும் இருக்கிறது" எனக்காக ஜெபிப்பீர்களா?

எத்தகைய பயங்கர சத்துருக்களை இவர் ஒவ்வொரு நாளும் சந்திக்கிறார்! புற்றுநோய் வேறு இடங்களிலும் பரவியிருக்கலாமோ என்ற பயத்தில் ஒவ்வொரு நாளையும் அவர் கடத்தி வருகிறார். சர்க்கரை வியாதியினால் ஏற்படும் உபத்திரவங்களையும், வயிற்றுப் புண்ணினால் ஏற்படும் வேதனைகளையும் அவர் சகிக்க வேண்டும். இந்த வேதனைகளை நான் எவ்வாறு தொடர்ந்து சகிப்பேன் என்று பலமுறை அவர் எண்ணியிருக்கலாம்.

கர்த்தருக்குள் இருந்த ஒரு மூதாட்டி இவ்வாறு எழுதினார். "மார்ச் மாதம் எனக்கு 81 வயது நிறைவாகும். எனக்கு மூட்டு வலியும், சர்க்கரை வியாதியும் இருக்கிறது. என்னுடைய முதுகும் கால்களும் பெலவீனமடைந்ததால் என்னால் நடக்க முடியவில்லை. நான் தனிமையில் வாழ்வதினால் என்னுடைய வீட்டு வேலையை நானே செய்ய வேண்டியதாயிருக்கிறது. எனக்கு அதிக பணமுமில்லை, உறவினர்களுமில்லை. தயவுசெய்து எனக்காக ஜெபியுங்கள்."

இந்த மூதாட்டி காலையில் படுக்கையிலிருந்து எழும்புவதே கடினம் என்று நினைக்கிறேன். வீட்டை சுத்தம் செய்வதும், சமைப்பதும் அவர்களுக்கு கடினமாயிருந்திருக்கும். "இந்த நாளை எப்படி கடத்துவேன்? படுக்கையிலிருந்து எழும்ப முடியவில்லை என்றால் நான் என்ன செய்வேன்" – என்று ஒவ்வொரு நாளும் அவர்கள் சிந்தித்திருக்கலாம்.

வேறொரு அன்பான சகோதரி இவ்வாறு எழுதியிருந்தார்கள். "என்னுடைய கணவரின் மூச்சுக் குழாயில் புற்றுநோய் இருப்பதாக இப்பொழுதுதான் எனக்கு செய்தி வந்தது. அவர் பக்தியுள்ள கணவராகவும், 14 வயதுள்ள எங்களது மகனுக்கு அன்பான தகப்பனாராகவும் இருந்து வருகிறார். இந்த சூழ்நிலையினால் என்னுடைய விசுவாசம் அதிகரிக்கப்பட்டு நான் பெலப்பட எனக்காக ஜெபியுங்கள்".

மலைப்போல தன் எதிரே நிற்கும் பிரச்சினையை இந்த சகோதரி ஒவ்வொரு நாளும் சந்திக்க பெலன் பெற்றுக்கொள்ள கதறுகிறார்கள்.

கிறிஸ்தவர்களிடத்தில் காணப் படும் துன்பங்களையும், வேதனைகளையும் இப்பொழுது அதிகமாய் கேள்விப்படுகிறேன் – திருமண வாழ்விலும், பணி விஷயங்க ளிலும், சரீர போராட்டங்களிலும் முடிவு பெறாத பிரச்சினைகளால் கிறிஸ்தவர்கள் தவிக்கிறார்கள். எவ்வாறு இதையெல்லாம் நான் சமாளிக்கப்போகிறேன்? இந்த சத்து ருக்கள் அதிக பெலனுள்ளவைகளாயி ருக்கின்றன. நானோ பெலவீனமாய், உதவியற்று இவற்றை சமாளிக்க சக்தியின்றி இருக்கிறேனே. தேவனே! எப்படி இவற்றை நான் கடந்து செல்வேன்? என்று மக்கள் கேட்கிறார்கள்.

உண்மை என்னவென்றால், இவை எதுவும் தேவனை ஆச்சரியப்படுத்துவ தில்லை. இன்று நாம் சந்திக்கும் சிக்கல்கள் உட்பட மனிதர்களுக்கு உண்டாகும் எல்லா பயங்கரங்களையும் தேவன் முன்பே அறிந்திருக்கிறார். இவற்றை நாம் எப்படி சந்திப்பது என்று தேவன் நமக்கு காட்ட விரும்புவதாக பரிசுத்த வேதாகமம் கூறுகிறது.

அன்று மோசேயினிடம் கர்த்தர் பேசிய இரண்டு விசுவாச வார்த்தைகள் இன்று நமக்கு உரியவைகளாகுகின்றன. அவரது கட்டளைக்கு நாம் கீழ்ப்படிவோமா னால் இத்தகைய பிரச்சினைகளை நாம் கடந்து போவது மட்டுமில்லாமல், நமக்கு தேவன் கொடுத்த வாக்குகளை நிறைவேற்றுவதில் எவ்வளவு உண்மையுள்ளவராயிருக்கிறார் என்பதையும் நாம் அறிந்து கொள்வோம்.

**1. நம்முடைய பிரச்சினைகளில் ஒன்றைக் குறித்தும் பயப்பட வேண்டாம் என்று தேவன் கட்டளையிடுகிறார்!**

"**அவர்களுக்குப் பயப்படாதிரு**" (உபாகமம் 7:19). இஸ்ரவேல் ஜனங்களுக்கு அவர்கள் என்பது 'வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே அவர்களை எதிர்த்த புறஜாதியார்'. நமக்கு அவர்கள் என்பது 'இன்று நம் வாழ்க்கையில் சந்திக்கும் பலவிதமான பிரச்சினைகளாகும்'.

நாம் ஏன் பயப்படக்கூடாது? தேவன் பயப்படாதே என்று சொல்லியிருப்ப தால் நாம் பயப்படக்கூடாது. இதற்கு வேறு விளக்கங்கள் தேவையில்லை. தேவன் சர்வவல்லவராகவும், போதுமானவராகவும் இருக்கிறார். நாம் சந்திக்கும் பிசாசின் கோட்டைகளை அவர் அறிந்திருக்கிறார். நமக்கெதிராய் வீசப்படும் ஒவ்வொரு கணையையும், சோதனையையும் அவர் அறிவார். எனவேதான், அவற்றில் ஒன்றுக்கும் நீங்கள் பயப்படாதிருங்கள் என்று கட்டளையிடுகிறார்.

இந்த கட்டளையை ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்தார். அறியாத ஒரு தேசத்திலே, வல்லமையான ராஜாக்கள் சூழ்ந்திருக்கும் தனது நிலைமை என்னவாகுமோ என்று அவர் திகைத்தார். ஆயினும் அவருக்கு நேராய் வந்த தேவ வார்த்தை பயப்படாதே என்பதுதான். "**ஆபிரகாமே, நீ பயப்படாதே நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்**" என்றார் (ஆதியாகமம் 15:1).

நான் உன்னைச் சுற்றிலும் மதிலாகவும், உன்னை பாதுகாக்கும் கோட்டையாகவும் இருப்பேன் என்பதுதான் அவ்வசனத்தின் பொருள். நீ பிரச்சினை களைச் சந்திக்கப் போகிறாய். ஆனால் அவற்றின் மத்தியில் நான் உன்னைப் பாதுகாப்பேன் என்கிறார் தேவன். ஆபிரகாம், கர்த்தரை விசுவாசித்தார். "... **அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்**" ஆதியாகமம் 15:6.

இதே வார்த்தை ஆபிரகாமின் மகனாகிய ஈசாக்குக்கும் வந்தது. அவரும் எதிர்ப்பின் மத்தியில் வாழ்ந்து வந்தார். அவரைச் சூழ்ந்திருந்த பெலிஸ்தியர் அவரை வெறுத்து, அவருக்குத் துன்பங்கள் கொடுத்து அந்த தேசத்தைவிட்டு அவர் போகும்படியாக விரும்பினார்கள். ஒவ்வொருமுறை ஈசாக்கு துரவு வெட்டிய போதும் பெலிஸ்தர் அவற்றை மண்ணினால் நிரப்பிப் போட்டார்கள் என்று வேதம் சொல்லுகிறது (ஆதியாகமம் 26:15).

ஈசாக்கு எங்குச் சென்றாலும் இத்தகைய பிரச்சினையை சந்தித்தார். தான் வெட்டின ஒரு துரவுக்கு ஏசேக்கு என்று ஈசாக்கு பேரிட்டார். அதற்கு வாக்குவாதம் என்று பொருள். வாக்குவாதங்களையும், எதிர்பார்ப்புகளையும்தான் ஈசாக்கு தன் வாழ்க்கையில் கண்டுவந்தார். நான் எப்படி என் குடும்பத்தைப் போஷித்து என் மந்தைக்கு நீர்ப் பாய்ச்சுவேன்? பெலிஸ்தர் எந்த நேரத்திலும் தாக்கலாம் என்றிருக்கும் சூழ்நிலையில் நான் பயமில்லாமல் எப்படி என் பிள்ளைகளை வளர்ப்பேன்? தேவனே என்னை ஏன் இங்கே வைத்திருக்கிறீர்? எப்படி நான் சமாளிப்பேன்? என்று அவர் நினைத்திருக்கலாம்.

சந்தேகத்தோடு கலங்கிக் கொண்டிருந்த ஈசாக்கிடம் தேவன் ஆபிரகாமிடம் பேசிய அதே வார்த்தையால் பேசினார். ..."**நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமுடைய தேவன், பயப்படாதே, நான் உன்னோடே கூட இருந்து, என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியைப் பெருகப்பண்ணுவேன்**"... ஆதியாகமம் 26:24.

ஈசாக்கைப் போல இன்று நாம் ஆபிரகாமின் பிள்ளைகள். ஆபிரகாமுக்கும் அவர் சந்ததிக்கும் தேவன் கொடுத்த அதே வாக்குத்தத்தத்தை நமக்கும் கொடுக்கிறார். "**நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும் வாக்குத் தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்**" கலாத்தியர் 3:29. ஆபிரகாமின் கேடகமாயிருந்த தேவனைத்தான் நாம் வணங்குகிறோம். அவரும் நம்முடன் வல்லமையாய் கிரியை செய்து வருகிறார்.

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


# நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.

வேளச்சேரி – முழுநேரம் – இந்தி
சேப்பாக்கம் – மாலை நேரம் – தமிழ்
(திங்கள், செவ்வாய், வியாழன்)

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

**உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.**

Diploma in Ministry : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்
Bachelor of Theology : மூன்று வருடங்கள்

**கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்**

**உடனே அணுகவும் !**

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் 2023 செப்டம்பர் 19 முதல் அக்டோபர் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

செப்டம்பர் 19 ⇨ **அழைப்பின் எதிரொலி** ஊழியங்கள் 55வது ஆண்டில் அடியெடுத்து வைத்ததை ஆசீர்வதித்த கிருபைக்காக....

செப்டம்பர் 20 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை நமது சுவிசேஷ அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு அனைத்து பணித்தளங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறதற்காக ...

செப்டம்பர் 21 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக...

செப்டம்பர் 22 ⇨ **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் பணியாளர்களை மற்றும் அவர்கள் குடும்பத்தினரைக் காத்து வருகிற கிருபைக்காக...

செப்டம்பர் 23 ⇨ **அழைப்பின் எதிரொலி** ஊடக ஊழியத்தின் 5 நிமிட யூடியூப் செய்தியின் மூலம் எழும்பி வரும் சாட்சிகளால் எங்களை ஆசீர்வதித்த கிருபைக்காக ...

செப்டம்பர் 24 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக் கல்லூரி** மற்றும் **அஞ்சல்வழிக் கல்விமுறைகளைக்** கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

செப்டம்பர் 25 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளுக்கு அர்ப்பணிப்புடைய ஒருங்கிணைப்பாளர்களை கிடைக்கச் செய்த கிருபைக்காக ...

செப்டம்பர் 26 ⇨ அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பை நல்கும் களப்பணியாளர்களை ஆசீர்வதித்து வருவதற்காக...

செப்டம்பர் 27 ⇨ நமது சுவிசேஷத்தின் அச்சகத்தின் தங்குதடையற்ற இயக்கத்திற்காகவும் அதற்கு காரணமாயிருக்கும் திறமையான ஊழியர்களுக்காகவும்...

செப்டம்பர் 28 ⇨ நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக்கல்லூரி**க்கு புதிய மாணவர்களை கொடுத்து ஆசீர்வதித்து வருவதற்காக ...

செப்டம்பர் 29 ⇨ நமது **அஞ்சல்வழி இறையியல் கல்வி** மற்றும் **தொலைதொடர்பு வேதாகமக்கல்வி** முறைகளின் வளர்ச்சிகளுக்காக ...

செப்டம்பர் 30 ⇨ வேளச்சேரியில் உள்ள நமது முழுநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரியில்** மெட்ரோ குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு கிடைக்கச் செய்த கிருபைக்காக ...

அக்டோபர் 01 ⇨ அர்ப்பணிப்புடன் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைக்கு ஆதரவளித்து வரும் இணை ஆசிரியர்கள் கொண்ட நமது ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

அக்டோபர் 02 ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபையின் ஞாயிறு ஆராதனைகளில் வழங்கப்படும் தேவச்செய்திகளின் வல்லமைக்காக ...

அக்டோபர் 03 ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டி வருகிறதற்காக ...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

அக்டோபர் 04 ⇨ இந்தியாவில் சுவிசேஷம் செல்லாத இடங்களுக்கு சுவிசேஷம் சென்று ஜனங்கள் இரட்சிக்கப்பட ...

அக்டோபர் 05 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய சக்திகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க ...

அக்டோபர் 06 ⇨ நமது ஸ்தாபன ஊழியர்களும் மற்றும் அச்சகப் பணியாளர்களும் சுகபத்திரமாக பாதுகாக்கப்பட...

அக்டோபர் 07 ⇨ நமது முழுநேர மற்றும் மாலைநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரி** மாணவர்களின் பாதுகாப்பிற்காக ...

அக்டோபர் 08 ⇨ இம்மாதத்திற்கான நம் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்படவேண்டி...

அக்டோபர் 09 ⇨ நமது ஊழிய விரிவாக்கம் மற்றும் உலகளாவிய சுவிசேஷ பிரபல்யத்திற்காகவும் ...

அக்டோபர் 10 ⇨ நமது தலைமைப் போதகரது சுயசரிதை எழுதும் செயல்பாடு நிறைவாய் நிகழ்ந்திட ...

அக்டோபர் 11 ⇨ உலகமெங்கிலும் சமாதானம் நிலவிட ...

அக்டோபர் 12 ⇨ உலகமெங்கும் களப் பணியாளர்களுக்கு தேவ பாதுகாப்பு கிடைத்திட ...

அக்டோபர் 13 ⇨ தேவனின் கருணையும், இரக்கமும் மணிப்பூர் மாநிலத்தில் ஊற்றப்படவும், மேத்தி, குக்கி இன மக்களிடையே அமைதி நிலவிடவும் ...

அக்டோபர் 14 ⇨ நமது ஆங்கில இணை ஆசிரியரான Dr. A. ரிச்சர்ட் சாமுவேல் அவர்களும் மற்றும் நமது மராத்திய இணை ஆசிரியரான சகோ. சசிகாந்த் திவாரி அவர்களின் மனைவி திருமதி சுவார்த்தா அவர்களும் விரைவில் பரிபூரண சுகம் பெற வேண்டி ...

அக்டோபர் 15 ⇨ உலகில் பல்வேறு பகுதிகளில் நிலவும் பொருளாதார மந்தநிலை முடிவுக்கு வரவேண்டி...

அக்டோபர் 16 ⇨ இயற்கை பேரழிவுகளிலிருந்து உலக மக்களுக்கு தேவ பாதுகாப்பு கிடைக்க வேண்டி...

அக்டோபர் 17 ⇨ அனைத்து நாடுகளுக்கும் தேவபயமுள்ள தலைவர்களை தந்து ஆசீர்வதிக்க வேண்டி...

அக்டோபர் 18 ⇨ ஒடுக்கப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதாரநிலை மேம்படவேண்டி...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

நம் வாழ்க்கையில் நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் நமது பரமபிதா காண்கிறார். நாம் எத்தகைய பிரச்சினையை சந்தித்தாலும் "பயப்படாதே" என்று மீண்டும் மீண்டுமாய் நமக்கு அவர் கட்டளையிடுகிறார். நம்முடைய பிரச்சினைகள் நம்மை கீழேத்தள்ளி அழித்துவிடும் என்று நாம் நம்பக்கூடாது. ஏனென்றால், தேவன் நமக்குக் கேடகமாய் இருக்கிறார் என்று நாம் அறிவோமே!

"**இஸ்ரவேலே, நீ பாக்கியவான்; கர்த்தரால் இரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவர் யார்? உனக்கு சகாயஞ்செய்யும் கேடகமும் உனக்கு மகிமை பொருத்திய பட்டயமும் அவரே; உன் சத்துருக்கள் உனக்கு இச்சகம் பேசி அடங்குவார்கள்; அவர்கள் மேடுகளை மிதிப்பாய்**"... உபாகமம் 33:29. தேவன் நம்மிடம், நான் உன்னைக் கைவிட்டேன் என்பது பொய்! நான் உன்மேல் கோபமாயிருக்கிறேன் என்பதும், உன்னுடைய சத்துருக்களை எதிர்த்து நீயே போராட உன்னை விட்டுவிட்டேன் என்பதும் பொய். அவை எல்லாம் சாத்தானின் பொய்கள் என்று கூறுகிறார்.

**உங்களோடு தங்கியிருக்கும் பாவத்தோடு போராடும் எல்லா கிறிஸ்தவர்களோடும் நான் பேச விரும்புகிறேன்!**

உங்களில் இருக்கும் ஒரு இச்சை அல்லது தீய பழக்கத்தைக் குறித்த வேதனையோடு ஒவ்வொரு நாளும் நீங்கள் படுக்கையிலிருந்து எழுந்திருக்கிறீர்களா? இந்த பயங்கர இச்சை என்னில் இன்னும் உயிரோடு இருக்கிறதே என்று வேதனையிலேயே வாழ்கிறீர்களா?

உன் இருதயத்திலுள்ள பாவத்தை தேவன் நன்கு அறிவார். இதை அவ்வாறு நீ வெறுத்து அதற்காக அழுகிறாய் என்பதையும் அவர் அறிவார். இப்பொழுது அவர் தமது வார்த்தையை நீ கேட்க விரும்புகிறார். பயப்படாதே நான் உன் கேடகம். உன்னை பாதுகாப்பவர். உன் சத்துருக்களை எதிர்த்து போராடும் பரிசுத்த பட்டயமாய் நானிருக்கிறேன். சோதனைகளை வெல்லும் வழியை நானறிவேன். நீ யுத்தம் செய்ய நான் கற்றுத் தருவேன்.

தாவீது இதை அறிந்திருந்தார். ஆகவேதான், "பொல்லாப்புக்கு பயப்படேன்" (சங்கீதம் 23:4) என்கிறார். பயத்தை உண்டு பண்ணிவிட்டால் சாத்தானுக்கு வெற்றி கிடைத்துவிடும் என்று அவர் அறிந்திருந்தார்.

அன்பானவர்களே, இவ்வாறுதான் சத்துரு உங்களுக்கெதிராய் கிரியை செய்வான். உங்கள் பாவத்தை நினைத்து உங்களை பயப்பட வைப்பான். பயப்பட்டால் விடுதலை கிடைக்கவே கிடைக்காது. துக்கத்தோடிருக்கும் எல்லா பரிசுத்தவான்களையும் நோக்கி தேவன், பயப்படாதேயுங்கள், உங்களது துக்கங்களை நான் அறிவேன். சாத்தான் உங்களை அழிக்க நான் விடமாட்டேன்! என்று கூறுகிறார்.

நான் என்ன செய்ய வேண்டும்? தேவ சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் நான் எப்படி பெறமுடியும்? என்று நீங்கள் கேட்கிறீர்களா? இதற்கான பதிலை தேவன் மோசேக்கும் இஸ்ரவேலுக்கும் கூறிய வார்த்தையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். முன்னே சமுத்திரமும் பின்னே சத்துருவின் சேனையும் வரும்போது தேவன் பயப்படாதிருங்கள்; "**நீங்கள் நின்று கொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்கு செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். நீங்கள் சும்மாயிருப்பீர்கள்**" (யாத்திராகமம் 14:13–14) என்று கட்டளையிட்டார்.

சும்மாயிருப்பீர்கள் என்றால் என்ன? சும்மா என்றால் கவலைப்படாமல், பிரச்சினைகளைத் தீர்க்க வழிகளைத் தேடாமல் தேவன் உங்களுக்கு ஒரு வழியை உண்டாக்குவார் என்று நம்பி அமர்ந்திருப்பதாகும். அவ்வாறு இருக்கும் போதுதான் இஸ்ரவேலுக்கு தேவன், **புறப்பட்டுப்போங்கள்** என்று கட்டளையிட்டது போல நமக்கும் கட்டளையிடுவார் (யாத்திராகமம் 14:15).

பயங்கரமான சத்துருக்களை யோசுவாவும் சந்தித்தார். கிபியோன் என்ற இடத்திற்குச் செல்ல அவரும் அவரது சேனையும் இரவு முழுவதும் பிரயாணம் செய்ய வேண்டியதாயிருந்தது. அங்கே ஐந்து ராஜாக்களின் சேனைகள் இணைந்து அவருக்கெதிராய் காணப்பட்டன. யுத்தக் களத்தை அவர் நோக்கியபோது, வலிய இரதங்களும், நன்கு பயிற்சி மேற்கொண்ட காலாட்களும் அவ்விடம் முழுவதுமாய் நிறைந்திருப்பதைக் கண்டார். யோசுவாவினிடத்தில் இருந்ததோ திறமையில்லாத பெலவீனமாக சேனை.

அந்த நிமிடம் யோசுவாவை ஒரு வேளை கலக்கம் தாக்கியிருக்கலாம். தேவனே! இந்த இடத்திற்கு நாங்கள் வந்து சேரும்போதே சோர்ந்து விட்டோம். இனிதான் இந்த வலிமையான சத்துருவை எதிர்த்து யுத்தம் செய்ய வேண்டும். தயவுசெய்து நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று எங்களுக்கு சொல்லும் கர்த்தாவே, என்று அவர் நினைத்திருப்பார்.

அப்பொழுது, **கர்த்தர் யோசுவாவை நோக்கி: "அவர்களுக்கு பயப்படாயாக; உன் கைகளில் அவர்களை ஒப்புக்கொடுத்தேன். அவர்களில் ஒருவரும் உனக்கு முன்பாக நிற்பதில்லை" என்றார்.** யோசுவா 10:8.

யுத்தத்திற்குச் செல்லும் முன்பே தேவன் யோசுவாவிற்கு வெற்றியை வாக்களித்தார். ஜெயம் ஏற்கனவே கிடைத்து விட்டது. நான் உனக்கு வெற்றியை வாக்களித்திருக்கிறேன் என்று அறிந்து நீ போய் யுத்தம் செய் என்று அவர் கூறினார்.

இதுவே சிலுவையின் செய்தியாகும். ஜெயம் நமக்காக ஏற்கனவே விடுவிக்கப்பட்டு விட்டது. நாம் எத்தகைய கடினமான பிரச்சினையைச் சந்தித்தாலும், எத்தகைய வலிய வேதனைகள் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்தாலும் நமது ஜெயம் உறுதியாகி விட்டது. **இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.** (ரோமர் 8:37).

அப்படியானால், நாம் ஒன்றுமே செய்யவேண்டாமா? நாம் ஒதுங்கி நின்றுவிட்டு தேவன் ஒரு தூதனை அனுப்பி நம் சத்துருக்களை முறியடிப்பார் என்று காத்திருக்க வேண்டுமா? இல்லை. இல்லவே இல்லை! தேவன் நமக்கு வெற்றியை வாக்களித்திருந்தாலும், நம்முடைய வேலையை அவர் செய்ய மாட்டார்.

சத்துருவை ஜெயிக்கும்படியாக **விசுவாசமாகிய கேடகத்தையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும்** (எபேசியர் 6:16,17) நாம் எடுக்க வேண்டும். தேவன் நம்மை பெலப்படுத்துவார் என்று நம்புவது முக்கியம். **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.** 1 கொரிந்தியர் 15:57.

நமது விசுவாசத்திற்கேற்ப பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கிறார். நாம் அவரை அழைக்கும்பேது மாமிசத்தின் கிரியைகளை அழிக்க இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை யோடு அவர் வருகிறார். நம்முடைய பங்கு விசுவாசமே, பின்பு நம்மை எதிர்த்து வரும் தீயவல்லமைகளை பரிசுத்தாவியானவர் தடுப்பார் என்று நம்பி நடக்க வேண்டும்.

**2. கடந்த காலத்தில் நமது சத்துருக்களை தேவன் எவ்வாறு தோற்கடித்தார் என்று நாம் நினைவுகூர வேண்டுமென்று தேவன் நமக்கு கட்டளையிடுகிறார்!!**

மோசே இஸ்ரவேலிடம், "**உன் தேவனாகிய கர்த்தர் பார்வோனுக்கும் எகிப்தியர் யாவருக்கும் செய்ததையும், உன் கண்கள் கண்ட பெரிய சோதனைகளையும் அடையாளங்களையும், அற்புதங்களையும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னைப் புறப்படப் பண்ணிக் காண்பித்த பலத்த கைகளையும் ஓங்கிய புயத்தையும் நன்றாய் நினைத்து, அவர்களுக்கு பயப்படாதிரு; நீ பார்த்துப் பயப்படுகிற எல்லா ஜனங்களுக்கும் உன் தேவனாகிய கர்த்தர் அப்படியே செய்வார்**" என்று கூறினார். உபாகமம் 7:18,19.

எத்தகைய வல்லமையான செய்தி இது! நீ எத்தகைய சத்துருவைச்

தொடர்ச்சி 8-ம் பக்கம்.....

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

| | | |
|---|---|---|
| 1. ஜெப உதவி | – | 24 மணி நேரம் |
| 2. வேதாகமக் கடித முறைக் கல்வி | – | தமிழ், ஆங்கிலம், இந்தி |
| 3. அழைப்பின் எதிரொலி | – | பத்திரிகைகள் (16 மொழிகள்) |
| தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒரியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகன். | | |
| 4. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் | – | (மூன்று இடங்களில்) மாலை நேரம் / முழு நேரம் |
| 5. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | | |
| 6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்) | | |
| 7. பயிற்சி வகுப்புகள் | | |
| 8. சுவிசேஷக் கூட்டங்கள் | | |
| 9. கைப்பிரதி விநியோகம் | – | தொடர் ஊழியம் |
| 10. சுவிசேஷ அச்சகம் | – | சுவிசேஷ பிரசுரங்கள் |
| 11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி | | |
| 12. சிறுவர் வேத பாடசாலை | – | ஞாயிறு காலை 8.30 மணி மாலை 4.00 மணி |
| 13. தமிழ் ஆராதனைகள் | – | ஞாயிறு காலை 8.00 மணி & 10.00 மணி |
| 14. இந்தி ஆராதனை | – | ஞாயிறு மாலை 4.00 மணி |
| 15. தெலுங்கு ஆராதனை | – | ஞாயிறு மாலை 5.00 மணி |
| 16. தமிழ் – ஆங்கிலம் ஆராதனை | – | ஞாயிறு மாலை 6.00 மணி |
| 17. போதகர் ஆலோசனைக் கூட்டம் | – | ஞாயிறு மாலை 4.00 மணி |
| 18. பெண்கள் ஆராதனை | – | புதன் மாலை 5.30 மணி |
| 19. இறையியல் கல்வி | – | புதன் மாலை 6.30 மணி |
| 20. ஆண்கள் ஆராதனை | – | வெள்ளி இரவு 7.00 மணி |
| 21. சீஷத்துவக் கூட்டம் | – | சனி மாலை 6.00 மணி |
| 22. வீட்டுக் கூட்டங்கள் | – | செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி |
| 23. விசேஷ திருவிருந்து | – | பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி |
| 24. ஊழியர்கள் கூடுகை | – | முதல் சனிக்கிழமை மாலை 5.30 மணி |
| 25. பெற்றோர் ஜெபம் | – | முதல் ஞாயிறு மாலை 4. 00 மணி |
| 26. இரவு ஜெபம் | – | 2–ம் வெள்ளி இரவு 9.30 மணி |
| 27. உபவாச ஜெபம் | – | மூன்றாம் சனிக்கிழமை காலை 9.30 மணி |
| 28. திருவிருந்து | – | 2–ம் ஞாயிறு ஆராதனைகள் |
| 29. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் | – | தினமும் இரவு 10.00 மணி |
| 30. ஊழியர் ஜெபம் | – | தினமும் காலை 9.00 மணி |
| 31. அலுவலகம் | – | தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர) |

# அழைப்பின் எதிரொலி
## தபால் வழிக் கல்வி
### இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

# அழைப்பின்எதிரொலி
## பத்திரிகையை
### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல் வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!

## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## நீண்ட தாடியுடைய கம்பீர மனிதர்!

**கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். ~ நியாயாதிபதிகள் 6:12**

சென்னையிலுள்ள அக்பர் சாகிப் என்ற தெருவில் இருந்த எனது வாடகை வீட்டின் விசாலமான சிறந்த அறையை புதிதாகத் தொடங்கப்பட்ட ஆலயத்தின் உபயோகத்திற்காகக் கொடுத்திருந்தேன். எனது வீட்டைச் சுற்றியுள்ள மக்கள் இஸ்லாமியராய் இருந்ததால் அவர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்கப் பிடிக்கவில்லை. ஆனால் தேவன் என்னை அந்த இடத்தில்தான் ஊழியம் செய்ய ஏவினார்.

நான் பல்வேறு சுவிசேஷ ஊழியங்களையும், தனிநபர் ஊழியத்தையும் செய்து கொண்டிருந்த போதிலும், ஒவ்வொரு ஞாயிறு காலை 9 மணிக்கு ஆலய ஆராதனை ஆரம்பித்தேன். எனக்கு முன்பு அநேக மக்கள் ஆராதனைக்கு அமர்ந்திருப்பது போல நான் எனது அக்கார்டியன் (இசைக்கருவி)ஐ எடுத்து வாசித்து, பாடல்கள் பாடி தேவனை ஆராதிப்பது வழக்கம். இந்தப் பாடல் சத்தம் அப்பகுதி மக்களுக்கு சற்றும் பிடிக்கவில்லை. முதல் சில ஆண்டுகளில் மக்களே இல்லாத ஆராதனைகளும், பின்பு மிகவும் சொற்பமான மக்கள் கலந்து கொள்ளும் ஆராதனைகளும் தான் நடந்தன.

1984–ஆம் ஆண்டில் ஒரு ஞாயிறு ஆராதனைக்கென்று அந்த ஆராதனை ஸ்தலத்தைச் சுத்தம் செய்து ஆயத்தம் செய்து கொண்டிருந்தேன். அந்த ஆராதனைக்கு ஒரு சில ஆத்துமாக்களையாகிலும் கொண்டுவரும்படி ஊக்கமாக தேவ சமூகத்தில் காத்திருந்து ஜெபித்தேன். ஆனால் ஒருவருமே வராததால் என் ஆவியிலும் சரீரத்திலும் சோர்ந்து போய்விட்டேன். உடைந்த உள்ளத்தோடு என் வீட்டின் வேறு ஒரு அறைக்குச் சென்று படுத்துவிட்டேன்.

அப்பொழுது ஒரு தரிசனம் கண்டேன். என்னுடைய வீட்டின் அந்த ஆராதனை அறையின் முக்கிய கதவு வழியாக ஒரு வயதான ஆனால், கம்பீரமான, நீண்ட தாடி வைத்த ஒருவர் வருவதைக் கண்டேன். அநேகர் அவரைப் பின் தொடர்ந்து உள்ளே வந்தனர். ஆனால் அவர்களுடைய முகங்கள் தெளிவாகத் தெரியவில்லை. அந்த மனிதர் மின்சார விளக்குகளையும், மின்விசிறிகளையும் பொருத்தி விட்டு முழங்கால்படியிட்டு தேவனைப் பாடித் துதிக்கவும், ஜெபிக்கவும் ஆரம்பித்தார். அந்த சத்தம் பலமாக இருந்ததால் என்னால் படுத்து கொண்டிருக்க முடியவில்லை. எனவே நான் எழுந்து பயத்துடனும், மரியாதையுடனும் அந்த அறைக்குள் சென்றேன். ஆனால் அங்கு யாருமே இல்லை. அந்த மனிதரும் மக்களும் மறைந்து விட்டனர்.

சில நிமிடங்கள் கழித்து Rev. Dr. பெவின் லாரன்ஸ் என்ற தேவ ஊழியரும், அவரது மனைவி செரீனா பெவின் அவர்களும், அவர்களது ஆண் கைக் குழந்தையுமாக எனது ஆலய அறைக்குள் நுழைந்தனர். தேவ ஆவியானவரால் உணர்த்தப்பட்டு அன்று எனது ஆலயத்துக்கு வந்ததாகக் கூறினார்கள். ஒரு சில நிமிடங்கள் கழித்து வேறு சில புதிய ஆத்துமாக்களும் வந்து ஆராதனை நடந்தது. அதன் பின்னர் எங்களது ஆலயத்தை தேவன் மேலும் மேலும் ஆசீர்வதித்தார்.

நமது தேவன் எல்லா நேரங்களிலும் நல்லவர். எந்த நேரத்திலும், எந்த வழியிலும், எவருடைய வாழ்விலும் அவரால் அற்புதம் செய்ய முடியும். உங்கள் வாழ்க்கையிலும் இன்றே ஒரு தெய்வீக நடத்துதலை எதிர் பார்த்து, தேவனை நம்புங்கள்!

*******

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

சந்தித்தாலும் பரவாயில்லை. அவர்கள் எல்லாரிடமிருந்தும் உனக்கு ஜெயத்தை ஆண்டவர் கட்டளையிட்டு விட்டார்! உன் பிதாக்களை பார்வோனிடமிருந்து விடுதலையாக்கிய தேவன் உனக்கும் அவ்வாறே விடுதலையளிப்பார்!! என்று மோசே இஸ்ரவேலருக்கு நினைவுபடுத்தினார். "**நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளை நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் நினைக்கும்படி...**" உபாகமம் 16:3 என்று, "**நீ எகிப்தில் அடிமையாயிருந்ததை நினைத்து**" உபாகமம் 16:12 என்று வேத புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

கடந்த காலங்களை நினைவுக் கூருங்கள்! இன்று வனாந்திரத்திலே கஷ்டங்களைச் சந்திக்கும்போது எகிப்தில் நீங்கள் சந்தித்த திகில்களை நினைத்துப் பாருங்கள். அடிமைகளாக வாழ்ந்த வாழ்க்கையை மறந்துவிடாதீர்கள். உங்களை விடுவிக்கவும், காப்பாற்றவும், அவற்றிலிருந்தெல்லாம் பரிசுத்தப்படுத்தவும் தேவன் செய்த ஒவ்வொன்றையும் நினைத்துப் பாருங்கள் என்று மோசே ஜனங்களிடம் கூறியிருக்கலாம்.

பயத்தினால் நிரம்பிய ஜனங்களிடம் தேவனது வார்த்தைகளை ஏசாயா தீர்க்கதரிசி அறிவித்தார். தேவன் தங்களை கைவிட்டு விட்டார் என்று இஸ்ரவேலர் நினைத்த காலம் அது. சத்துருக்கள் அவர்களை என்ன செய்வார்களோ என்று கலங்கிக் கொண்டிருந்த நேரம் அது! ஆனால் ஏசாயா, சாகப்போகிற மனுஷனுக்கும், புல்லுக்கொப்பாகிற மனுபுத்திரனுக்கும் பயப்படுகிறதற்கும், வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கும் நீ யார்? இடுக்கண் செய்கிறவன் அழிக்க ஆயத்தமாகிறபோது, நீ அவனுடைய உக்கிரத்துக்கு நித்தம் இடைவிடாமல் பயப்படுகிறதென்ன? இடுக்கண் செய்கிறவனுடைய உக்கிரம் எங்கே? என்று அவர்களை தைரியப்படுத்தினார்.

தேவன் தீர்க்கதரிசியின் மூலமாக, நான் யார் என்பதை நீங்கள் மறந்துவிட்டதால் தான் பயப்படுகிறீர்கள். என்னுடைய வல்லமையையும், உங்களை விடுவிக்கக்கூடிய எனது சக்தியையும் எண்ணாமல் உங்களுடைய பிரச்சினைகளை மாத்திரம் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், உங்களுடைய வாழ்க்கையில் எனது கரம் இன்னும் உண்டு என்பதை மறந்துவிட்டீர்கள்! என்று கூறுகிறார்.

உங்களது வாழ்க்கையில் தேவன் செய்த அற்புதங்களை நினைக்க முடியாத அளவுக்கு கஷ்டங்கள் உங்களுக்கு வந்து

கொண்டிருக்கலாம். இரவின் பயங்கரத்தைப் போல என் வாழ்க்கை இருந்து வருகிறது. சந்தோஷப்பட அதிகமாக என்னிடத்தில் ஒன்றும் இல்லை. தேவனது அற்புதங்களை அனுபவிக்காமல் அவற்றை நான் எப்படி நினைவுக்கூர முடியும்? என்று ஒருவேளை நீங்கள் நினைக்கலாம்.

ஒன்றை நீங்கள் புரிந்துக் கொள்ள வேண்டும் – நமது அனுபவங்கள் விசுவாசத்தைத் தூண்டிவிடலாம். ஆனால் அவை நமது விசுவாசத்துக்கு அஸ்திபாரமாக அமையாது. எனவேதான் ஆண்டவர் இயேசு என்ன செய்தார் என்பதை அறியும்படி தேவவார்த்தை வலியுறுத்துகிறது. நமக்காக சிலுவையில் ஆண்டவர் இயேசு எடுத்த வெற்றியை நாம் நினைத்து விசுவாசத்தினாலே அதை நாம் பற்றிக் கொள்ள வேண்டும். ஆவியானவராலே நாம் ஜெயத்தைப் பெற்றுக் கொள்ள இயேசு மாத்திரமே நம்மை பெலப்படுத்துகிறார்.

*நான் என் பிதாவினிடத்தில் செல்கிறேன். ஆனால் நான் உங்களை அனாதைகளாக விடமாட்டேன் என்று இயேசு சொன்னார்!*

இயேசு தமது சீஷர்களிடம், **"இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத் திற்குப் போகிறேன்... நான் உங்களை திக்கற்றவர்களாக விடேன்."** யோவான் 16:5, 14:18. திக்கற்றவர்கள் என்ற வார்த்தையின் கிரேக்க பதத்திற்கு பெற்றோரில்லாத அனாதைகள் என்று பொருள்படும். சீஷர்கள் உணர்ந்தது போல நீங்களும் சில நேரங்களில் உணரலாம். நீங்கள் தனிமையாக இருப்பதுபோலவும், உங்களுக்காக தேவன் ஒன்றும் செய்யாதது போலவும் உங்களுக்கு தோன்றலாம். அவர் உங்களைப் பராமரிப்பதற்கான எந்த அடையாளமும் இல்லாதது போல் தோன்றலாம். சில காலங்களில் தேவனது ஆவியானவர் உங்களைவிட்டு போய்விடுவார் என்றும் முதிர்வயதில் உங்களைக் கைவிட்டு விடுவார் என்றும் சாத்தான் உங்களிடத்தில் பொய் சொல்லலாம்.

ஆனால் ஒரு நம்பமுடியாத அற்புதத்தை உங்களால் மறக்க முடியாது. அது, இயேசு தம்மைப் பின்பற்றுவோர் எல்லோருக்கும் கொடுத்த வாக்கு! உங்களை அனாதையாக விடமாட்டேன்!! உங்களுக்காக நான் கிரயம் செலுத்தியிருக்கிறேன். நீங்கள் என்னுடையவர்கள்!!!

நீங்கள் எத்தகைய நிலையிலும் கடந்து செல்லலாம். ஆனால் உங்களது பரமபிதா எந்தச் சூழ்நிலையிலும் உங்களைக் கைவிட்டுவிட நினைத்ததுமில்லை. ஒரு நாளும் கைவிடவும் மாட்டார். பின்வாங்கப்படாத அவரது நித்திய வாக்கை கேளுங்கள்: "**சீயோனோ: கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொல்லுகிறாள். ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது**" ஏசாயா 49:14–16.

இப்பகுதியின் பொருள் பின்வருமாறு: உனது பாதுகாப்பின் அவசியம் என் கண்களின் முன் எப்போதும் இருக்கிறது! இயற்கைக்கு அப்பாற்பட்ட எனது மதில்கள் உன்னைச் சுற்றிலும் பாதுகாப்பாய் இல்லாமல் இருந்த நேரமே கிடையாது!! எனது பாதுகாப்பின் வேலி எப்போதும் இருக்கிறது!!!

தங்கள் பிள்ளைகளைக் கைவிட்ட பல தாய்மார்களை – போதகர்களின் மனைவிகள் உட்பட பலரை நான் அறிவேன். சில வாரங்களுக்கு முன்பாக ஒரு போதகர் இவ்வாறு எங்களுக்கு எழுதினார். எங்களுக்குத் திருமணமாகி 25 வருடங்களாகின்றன. ஆனால் சமீபத்தில் இன்டர்நெட் (internet) மூலமாகச் சந்தித்த ஒருவனோடு என் மனைவி போய் விட்டாள். என்னையும் என் பிள்ளைகளையும் அவள் உதறிச் சென்றுவிட்டாள். இன்னும் நான் அவளை நேசிக்கிறேன். அவள் திரும்பிவர வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஆனால் அவள் வரமாட்டாள். இதனால் வேதனையுற்ற எனக்கு தூக்கமே வருவதில்லை. எப்படி நான் சமாளிக்கப்போகிறேனோ தெரியவில்லை.

இவருக்கு தேவன் இவ்வாறு பதிலளிக்கிறார். உன் அன்பு மனைவி உன்னை மறந்துவிடலாம் – ஆனால் நான் ஒருக்காலும் உன்னை மறப்பதில்லை. உன்னைச் சுற்றிலும் உள்ள என் மதில்கள் பலமுள்ளதாக எப்போதும் இருக்கும்.

பல ஆண்டுகளாக குடிகாரக் கணவன்மார்களோடு வாழ்ந்த பல பெண்களிடமிருந்து எங்களுக்குக் கடிதங்கள் வருவதுண்டு. அவர்களுடைய கலக்கத்தை குறித்து வாசிக்கும்போது, எந்தவித வெற்றியின் அடையாளமும் இல்லாமல் இந்தப் பெண்கள் ஏன் இவ்வளவு காலம் வேதனையில் வாழ வேண்டும்? என்று தேவனிடம் கேட்டதுண்டு.

இருப்பினும், நாம் எந்த வேதனையின் வழியாகச் சென்றாலும் பரவாயில்லை; எவ்வளவு காலம் அதைச் சகிக்க வேண்டியது வந்தாலும் பரவாயில்லை. ஒன்று நிச்சயம்:

*எல்லாவற்றிலும் நம்மைப் பாதுகாக்க அவரது கிருபை நமக்குப் போதும்!*

தேவனை நோக்கி பவுல் அப்போஸ்தலன் இவ்வாறு கதறினான். ஆண்டவரே என் சரீரத்திலுள்ள முள்ளை தயவு செய்து என்னைவிட்டு நீக்கும்! தேவனோ அவனுக்கு, **என் கிருபை உனக்குப் போதும்** 2 கொரிந்தியர் 12:9 என்று பதிலளித்தார். தேவன் தமது ஊழியக்காரனை நோக்கி: பவுலே, இந்த முள்ளோடுதான் நீ வாழ வேண்டும். ஆனால் உன் வேதனையின் நேரத்தில் உனக்குத் தேவையான கிருபையை நான் தருவேன். முடிவில்லாதபடி அந்த கிருபையை உனக்குத் தருவேன் என்றார்.

நமது சூழ்நிலைகளிலிருந்து கிடைக்கும் விடுதலையைவிட மேலானது அவரது கிருபை என்று நாம் அறியும்படி தேவன் விரும்புகிறார். ஏன்? அவர் யாரென்பதை முழுவதுமாக அவரது கிருபை வெளிப்படுத்துகிறது. தேவனது கிருபை இயேசு கிறிஸ்துவில் வெளிப்படுகிறது. இயேசுவின் பரிசுத்தமும், அன்பும், இரக்கமுமான இருதயத்தில் அக்கிருபை வெளிப்படுகிறது.

நம்முடைய வேதனையின் ஒவ்வொரு பகுதியையும் நமது பரமபிதா காண்கிறார். நமக்கு பின்வரும் வாக்குத் தத்தங்களை தருகிறார். **நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுக் காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம்.** சங்கீதம் 37:39.

**"... நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை" என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே.** எபிரெயர் 13:5–6.

**நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி, உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன். இதோ, உன்மேல் எரிச்சலாயிருக்கிற யாவரும் வெட்கி இலட்சையடைவார்கள். உன்னோடே வழக்காடுகிறவர்கள் நாசமாகி ஒன்றுமில்லாமற் போவார்கள். உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்; உன்னோடே யுத்தம்பண்ணின மனுஷர் ஒன்றுமில்லாமல் இல்பொருளாவார்கள். உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலது கையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன்... சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத் தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவு தாகத்தால் வறளும்போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களை கைவிடாதிருப்பேன்.** ஏசாயா 41:10–13,17.

எந்தச் சூழ்நிலையையும் உங்களால் சமாளிக்க முடியும். இயேசு கிறிஸ்துவின் கிருபையால் இக்கட்டானாலும் நாசமோசமானாலும் உங்களால் சமாளிக்க

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

முடியும். எது உங்களை எதிர்த்து வந்தாலும் சரி – அவரிடத்தில் போதுமான கிருபையும் பரிசுத்த ஆவியானவரிடத்தில் போதுமான ஆறுதலும் உங்களுக்கு உண்டு!

**ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்.** எபிரெயர் 10:35

**ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.** 1 பேதுரு 5:6

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

Branch : **Triplicane, Chennai-5**
Name : **S. Sam Selva Raj**
A/C No. : **1023 2934 679**
IFSC : **SBIN 00 00 249**
SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

Branch : **Anna Salai, Chennai-6**
Name : **Echo of His Call**
A/C No. : **6038 0502 2319**
IFSC : **ICIC 000 6038**

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

Branch : **Triplicane, Chennai-5**
Name : **Echo of His Call Educational Trust**
A/C No. : **1023 2923 805**
IFSC : **SBIN 00 00 249**

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**✽ வருட சந்தா ரூ. 100/– ✽ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/21-23**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th AUGUST 2023**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

***JESUS LOVES YOU!***

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**